சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 29.01.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 24/**2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-4 |
| சாட்சியின் பெயர் | : | மல்லிகா |
| கணவர் பெயர் | : | கிருஷ்ணன் |
| கிராமம் | : | மலையூர் |
| தாலுக்கா | : | கூத்தாநல்லூர் |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 55 |

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு. R. வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1, 2 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

எந்த தேதியில் போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால், தேதி ஞாபகம் இல்லை. ஆனால் விசாரித்தார்கள். 1ம் எதிரி நடராஜனின் வீட்டு

வாசலில் வைத்து விசாரித்தார்கள். நானும், அ.சா.1, அ.சா.2 இருவரும் ஒரே தெருவை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். சம்பவம் பற்றி எனக்கு நேரிடையாக தெரியுமா என்றால் சத்தம் கேட்டு போய் பார்த்தேன். அங்கே ஒரே கூட்டமாக இருந்தது. எவ்வளவு நேரம் பிரச்சனை நடந்தது என்று சொல்லமுடியுமா என்றால் சொல்ல முடியாது. எதிரிகள் இருவருக்கும் காயம் ஏற்பட்ட விபரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அது சம்மந்தமாக போலீசார் என்னிடம் கேட்கவும் இல்லை. நானும், அ.சா.1, அ.சா.2 இருவரும் ஒரே தெருவை சேர்ந்தவர்கள் என்பதாலும், அ.சா.1 கொடுத்த புகாரின் பேரில் தவறாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல், எதிரிகள், அ.சா.1, அ.சா.2 யாரையும் தாக்கவும் இல்லை, ஜாதி பெயரை சொல்லி திட்டவுமில்லை, அ.சா.1 எங்கள் இனத்தை சேர்ந்தவர் என்பதற்காக தவறான புகாரை வலியுறுத்தி சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளை அ.சா.1, அ.சா.2 மற்றும் 9 நபர்கள் சேர்ந்து தாக்கி காயத்தை ஏற்படுத்தியுள்ளனர் என்றும், எதிரிகள் கொடுத்த புகாரின் அடிப்படையிலான வழக்கிலிருந்து தப்பிக்க இந்த அ.சா.1 தவறான ஒரு புகாரினை கொடுத்துள்ளார் என்றும், அ.சா.1ன் ஒரே தெரு மற்றும் ஒரே இனத்தை சேர்ந்தவர்கள் என்பதால், அ.சா-1க்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M
Digitally signed by VADIVEL M
Date: 2026.01.29 17:57:18 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.